## வறுமைசார் கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் 2010

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கு இணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கங்களைத் தவிர்த்து.

(அ) செயற்திட்டம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் விசேட (யென்) கணக்கிற்கான மீள் நிரப்பல்களும் அதிலிருந்தான பற்றுதல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது அவை கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களிற்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவு ரூபா 2,573,697,860 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 5,380,039,837 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| செலவின வகுதிகள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு | | 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2010 | 2009 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 57,915 | 105,300 | 104,673 |
| நடைபெறும் வேலைகள் | 2,394,840,957 | 1,622,754,746 | 4,876,231,213 |
| ஆலோசனை சேவைகள் | 178,798,988 | 176,688,736 | 503,703,951 |
| | 2,573,697,860 | 1,799,548,782 | 5,380,039,837 |

## 2.2 விசேட (யென்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விசேட (யென்) கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி கீழே தரப்படுகின்றன.

| விபரம் | இலங்கை ரூபா (மில்லியன்) | இலங்கை ரூபா (மில்லியன்) | யென் (மில்லியன்) |
|---|---|---|---|
| 2010 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | | 2,928.9 | 2,410.2 |
| கழி :- | | | |
| பற்றுதல்கள் | 1,585.4 | | 1,219.9 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | (255.8) | 1,329.6 | - |
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | 1,599.3 | 1,190.3 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) மீளாய்வாண்டில் வெளிநாட்டு உதவிக் கணக்கின் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து உருவாகிய வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ நட்ட ங்கள் கணிக்கப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டம் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2005 ஆம் ஆண்டு தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேந்தலைச் செலவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1,321,098 தொகை 2008 ஆம் ஆண்டில் செயற்திட்ட நிதிகளிலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அக்கொடுக்கல் வாங்கல் 2010 ஆம் ஆண்டிலும் கூட தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நீர் வழிகளை அமைக்கும் செயன்முறையில் செயற்திட்டத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளுக்கு ஏற்பட்ட வெடிப்புக்கள் மற்றும் பாதிப்புக்களுக்கு திருத்தங்களை மேற்கொள்வதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்

சபையிடமிருந்து 2010 ஆம் ஆண்டில் ரூபா 17,756,097 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூபா 2,937,763 அல்லது 16.55 சதவீதம் மாத்திரம் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 14,818,334 அல்லது 83.45 சதவீதம் செயற்திட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாது மற்றுமொரு கட்டுநிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தக்காரருக்கும் ஆலோசகருக்கும் செலுத்தவேண்டிய ரூபா 200,145,615 கூட்டுமொத்த தொகை 2009 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவி பெறவேண்டிய கணக்கிற்குச் சீராக்கப்படவேண்டிய போதிலும் அத்தொகை 2010 ஆம் ஆண்டிற்கான கணக்கிலும் மீண்டும் சீராக்கப்பட்டிருந்தது. எனவே வெளிநாட்டு உதவிக் கணக்கும் ஒப்பந்தக்காரர் மற்றும் ஆலோசகருக்குச் செலுத்தவேண்டிய தொகையும் ரூபா 200,145,615 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(v) 2010 திசெம்பரில் ஒப்பந்தக்காரருக்கு யென் 24,533,397 செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் அதே தொகையினை கணக்குகளில் பிழையாகக் கணக்குவைத்திருந்ததுடன் அதன் விளைவாக வெளிநாட்டு உதவி பெறவேண்டிய கணக்கு மற்றும் ஒப்பந்தக்காரர்கள் கணக்குகளில் யென் 24,533,397 அதிகரித்துக் கூறல்கள் அவதானிக்கப்பட்டன.

(vi) மீளாய்வாண்டிற்கான அட்டுறுச் செலவுகளுக்கான ஏற்பாடானது விநியோகத்தர் ஒருவருக்குச் செலுத்திய ரூபா 280,000 தொகையின் சீராக்கலின் காரணமாக அதே தொகையினால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

### 3.2.1 ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) வீதி மீள் நிர்மாணம்

வீதிப் பிரிவின் சிவில் வேலைகள் ஒப்பந்த உடனபடிக்கைக்கு இணங்க 2010 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவேண்டிய போதிலும் கணியப்பட்டியலின் 139 விடயங்கள் தொடர்பான ரூபா 273,421,407 பெறுமதியான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது ஒப்பந்தத்தின் மொத்த கிரயத்தின் 8.8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ளமுடியாதிருந்தன.

**(ஆ) கல்லடிப்பாலத்தின் நிர்மாணம்**

ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்லடி பாலம் நிர்மாணத்தின் 2010 திசெம்பர் மற்றும் 2011 சனவரி மாதங்களுக்கான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் பேரில் 2011 பெப்ரவரி 23 ஆந் திகதி ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாலத்தின் வேலை தொடங்கியதிலிருந்து 2011 சனவரி 31 ஆந் திகதியளவில் 10 மாத காலம் கடந்திருந்த போதிலும் ஒப்பந்தப் பெறுமதியின் 20 சதவீத முற்பணக் கொடுப்பனவாகிய ரூபா 162,693,913 தொகை தொடர்பான ஒப்பந்த நடவடிக்கைகளின் 75 சதவீதம் மாத்திரம் ஒப்பந்தக்காரரினால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. செயற்திறனின்மை விளைவித்துள்ள தாமதத்தின் காரணமாக செலுத்திய முற்பணத்துடன் வேலை 18 மாத ஒப்பந்த காலத்தின் போது செய்யப்படலாம் என்பது ஐயத்திற்குரியதாக உள்ளது.

(இ) கல்லடி பாலத்தின் புதிய வடிவமைப்பினைத் தயாரிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 06 பொறியியலாளர்களுக்கு ரூபா 575,000 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க சேவையில் இருக்கின்ற வேளையில் அரசாங்க உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொண்ட அறிவினைப் பயன்படுத்தி ஏனைய நிறுவனங்களுக்கு அல்லது தனிப்பட்டவர்களுக்கு வழங்கும் சேவைகளின் மூலம் பெற்றுக்கொண்ட கட்டணங்கள் மீது திரண்ட நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையானது தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 மேற்பார்வை செய்யும் ஆலோசகர்

முறையே யென் 228,600,000 மற்றும் ரூபா 180,200,000 உடன்பட்ட கிரயத்தில் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டிலிருந்து ஆலோசனை சேவைகளையும் உள்ளூர் ஆலோசகர்களையும் பெற்றுக்கொள்வதற்காக 2007 ஆம் ஆண்டில் ஒரு கூட்டுமுயற்சி ஆலோசனைக் கம்பனி நியமிக்கப்பட்டிருந்தது. அவ்வற்றில் இடைநேர் மற்றும் நிகழத்தக்கவைகளைத் தவிர்த்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆலோசனைகளின் உள்ளபடியான கிரயம் மாத்திரம் முறையே யென் 216,254,710 மற்றும் ரூபா 166,542,411 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 யூன் மாதத்திலிருந்து தொடங்கி 6 மாத சேவைக் காலத்துடன் நியமிக்கப்பட்ட ஆவண நிபுணத்துனர் 2010 திசெம்பர் இறுதி வரையும் ஒரு மாதம் மாத்திரம் சேவையாற்றியிருந்ததனால் வேண்டப்பட்ட சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததா என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்துவது சாத்தியமற்றதாக இருந்துது. அந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட யென் 16,551,470 இல் மிகுதித் தொகையான யென் 13,838,470 ஒதுக்கீட்டின் 84 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. எனவே செயற்திட்டம் தொடர்பான ஆவணங்கள் முறையாகத் தயாரிக்கப்பட்டிருந்தன என்பதனையும் ஆவண நிபுணத்தினரின் தொடர்புபட்ட நடவடிக்கைகள் செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்டவாறு முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பதனையும் கணக்காய்வில் திருப்திகொள்வது சாத்தியமற்றதாக இருந்தது.

(ஆ) ஆலோசனை சேவையிலுள்ள 07 பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படாதிருந்த போதிலும் கணியப் பட்டியலில் 161 மனித மாதங்களுக்காக ரூபா 22,702,579 தொகை காட்டப்பட்டிருந்தது. எனவே அந்த உத்தியோகத்தர்களினால் பரிசோதனை செய்யப்படவேண்டிய ஒப்பந்தக்காரரின் வேலை முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதனை கணக்காய்வில் திருப்திகொள்வது சாத்தியமற்றதாக இருந்தது.

## 3.3 செயற்திட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளின் மீது திரட்டு நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுக் கடனிலிருந்து ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தவேண்டிய வீதி மேம்படுத்தல்கள் மீதான செலவாகிய ரூபா 11,975,941 தொகையும் செயற்திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட வேலையாட்கள் கிரயமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட ரூபா 957,152 தொகையும் செயற்திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்த காத்தான்குடி பிரதான வீதியின் கீழ் அமைப்பதற்கான நீர்க்குழாய்களை கொள்வனவு செய்வது தொடர்பாகச் செலவு செய்யப்பட்ட ரூபா 1,767,000 தொகையும் திரட்டு நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தன. அதற்கான காரணங்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த அதேவேளை அதற்காக திறைசேரியின் சம்மதம் பெற்றுக்ககொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போக்குவரத்து அமைச்சின் பிரத்தியேக செயலாளரின் போக்குவரத்து நடவடிக்கைகள் சம்பந்தமாக தனியார் போக்குவரத்து கம்பனி ஒன்றிற்கு ரூபா

454,897 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிசார் மீளாய்வு

#### 4.1.1 நிதிகளின் பயன்பாடு

| | உடன்படிக்கையின் படி வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2010 ஆம் ஆண்டிற்கான பாதீடு | 2010 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | 2010 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| | யென் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| ஜேபிஐசீ | 4,460 | 4,756 | 1,790.0 | 1,630.8 | 4,716.3 |
| ஜிஓஎஸ்எல் | - | 1,494 | 241.9 | 241.9 | 591.3 |
| | 4,460 | 6,250 | 2,031.9 | 1,872.7* | 5,307.6* |

* முற்பணற்களையும் அட்டுறுச் செலவுகளையும் தவிர்த்ததன் காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகைகள் வேறுபட்டிருந்தன.

### 4.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 4.2.1 செயலாற்றல்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அக்கரைப்பற்றுவிற்கும் திரிகண்டுமடுவிற்கும் இடையிலான 100 கிலோமீற்றர் வீதியினை மீள நிர்மாணித்தலும் ரூபா 6,250 மில்லியன் கிரயத்தில் கல்லடி புதிய பாலத்தினை நிர்மாணித்தலும் 30 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டுமென (913 நாட்கள்) வரியினை நீக்கி ரூபா 3,806,804,232 தொகைக்கு 2007 திசெம்பர் 06 ஆந் திகதி சீன வெளிநாட்டு பொறியியல் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் குறைந்த அளவான செயலாற்றலின் காரணமாக செயற்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்களின் சம்மதத்துடன்

கம்பனியினால் கல்லடிப் பாலத்தின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக கம்பனியின் ஒப்பந்த தொகையிலிருந்து ரூபா 700 மில்லியன் கழிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 540 நாட்களுக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டுமென பாலத்தின் நிர்மாணத்துக்கான ஒப்பந்தம் ரூபா 813,469,566 கிரயத்தில் 2010 மார்ச் 25 ஆந் திகதி அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடக்க ஒப்பந்தத்தின் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்த போதிலும் வீதிகள் பிரிவின் மீள் நிர்மாணத்த்திற்கான ஒப்பந்த காலத்தினை குறைப்பதற்குப் பதிலாக 184 நாட்களான இரண்டு மேலதிக காலநீடிப்புக்கள் 2010 திசெம்பர் 31 அளவில் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பாலம் நிர்மாணம் தொடர்பான புதிய ஒப்பந்த விலையில் ரூபா 113,469,566 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் செயற்திட்ட காலத்தின் போது எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று இலாபத்திலிருந்து அந்த தொகையினைத் தீர்த்துவைப்பதற்கு செயற்திட்டம் கடன்வழங்கும் நிறுவனத்துடன் உடன்பட்டிருந்தது. குறித்த காலத்தின் போது பெற்றுக்கொள்ளக்கூடியதான நிதிகளுடன் ஒப்பந்தத்தினைப் பூர்த்திசெய்ய முடியாத சந்தர்ப்பத்தில் மேலதிகச் செலவினை இலங்கை அரசாங்கம் பொறுத்துக்கொள்ளும்.

(இ) 2010 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான 18 மாதங்களில் கல்லடிப்பாலத்தின் நிர்மாணத்திற்கான புதிய ஒப்பந்தம் மீதான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றமானது 8.2 சதவீத உள்ளபடியான செயல்முன்னேற்றத்திற்கு எதிராக 26.08 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஈ) வேலைத் திட்டம் மற்றும் 2010 திசெம்பர் மாதத்திற்கான செயல்முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தகாரரின் செயல்முன்னேற்றத்திற்கான குறிப்பின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளபடியான செயல்முன்னேங்களுக்கிடையே பிரதான விடயங்களின் செயல்முன்னேற்றத்திலுள்ள குறைவு 0.08 சதவீதத்திற்கும் 29.04 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடையதாகக் காணப்பட்டது.

### 4.2.2 பௌதீக செயலாற்றல்

வீதியினதும் கல்லடிப் பாலத்தினதும் பௌதீகச் செயலாற்றலானது 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் முறையே 100% மற்றும் 26.08% இற்கு எதிராக 99.81% மற்றும் 8.2% ஆக இருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| | ஒப்பந்தம் | திருத்திய ஒப்பந்தத்தின் பெறுமதி | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றம் % | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயல்முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| | | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | | |
| 1. | A4 வீதியின் 364 ஆவது கிலோ மீற்றரிலிருந்து 427 ஆவது கிலோ மீற்றர் வரை 64 கிலோ மீற்றர்கள் மற்றும் A15 வீதியின் 36 கிலோ மீற்றர் மீள் நிர்மாணம் | 3106.804 | 2906.614 | 100 | 99.8 |
| 2. | கல்லடிப்பாலம் நிர்மாணம் | 813.469 | 59.387 | 26.08 | 8.2 |